பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 06 சனிக்கிழமை 20.06.2020 கதிர் 227


இனிது ரகசியம் அல்ல!

'தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டியது மாதிரி' என்பார்கள்.

அப்படி ஒரு விடயம் நமது அரசியலில் அரங்கேறப் போகின்றது. தெற்கில் இடம் பெற்ற அரசியல் நகர்வுகள் வடக்கின் அரசியல் சூடு பிடிக்கப்போகின்றது. பக்கம் 02 »

# வடக்கு - கிழக்கு இராணுவ மயம்



## ஐ.நா. விசேட அறிக்கையாளர் மிகவும் காட்டமான அறிக்கை

ஜெனிவா, ஜூன் 20

இலங்கையில் போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் கூட இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகள் தீவிர இராணுவ மயமாக்கப்பட்டுள்ளன. இராணுவத்தின் கண்காணிப்புக்களும் தீவிர மாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஐ.நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வோல், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்துள்ள வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். 2

## கொரோனா 1,948

கொழும்பு, ஜூன் 20

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,948 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 938 பேர் 2

## வாள்வெட்டுக்குச் சென்றோரை மடக்கிப் பிடித்தது இராணுவம்

### நாயன்மார்கட்டுப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம், நாயன்மார் கட்டுப் பகுதியில் வாள்வெட்டு மோதலுக்குச் சென்றவர்களை இராணுவம் மடக்கிப் பிடித்துள்ளது.

நேற்று மாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்தப் பகுதியால் 7 மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை இராணுவம் வழி மறித்துள்ளது.

இதன்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மட்டுமே சிக்கியுள்ளனர். ஏனையவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். 2

## தமிழ் மக்கள் விரும்பும் ஒருவரே கூட்டமைப்பின் தலைவராவார்!

### கூறுகின்றார் சம்பந்தன்

கொழும்பு, ஜூன் 20

மக்கள் விரும்பும் ஒருவரையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகத் தெரிவு செய்வோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்றிரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கூட்டமைப்பின் அடுத்த தலைவர் யார் என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சம்பந்தன்,

தமிழ் மக்களால் நன்கு விரும்பப்படும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் 2

## மாகாணத் தேர்தலில் கூட்டமைப்பு இளைஞர் படையைக் களமிறக்கும்

கொழும்பு, ஜூன் 20

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகளவில் இளம் வேட்பாளர்களையே களமிறக்கவுள்ளது.

– இப்படிக் கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்றிரவு இடம்பெற்ற செவ்வி ஒன்றில் கருத்து வெளியிட்ட அவர்,

எதிர்வரு மாகாண 2

## ஒரே இரவில் 3,000 இராணுவச் சிப்பாய்களை கொன்றொழித்தார் எனக் கருணா பெருமிதம்

மட்டக்களப்பு, ஜூன் 20

ஒரே இரவில் தாம் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் வரை யிலான இராணுவ சிப்பாய்களைக் கொன்றொழித்தார் என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

ஆனையிறவுப் பகுதியில் வைத்து ஒரே இரவில் இவ்வாறு இராணுவச் சிப்பாய்களைத் தான் 2



### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

## தமிழ் பொலிஸ் அலுவலர் கல்முனையில் உயிரிழப்பு



அம்பாறை, ஜூன் 20

அரச புலனாய்வுத் துறையில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கடமை அறையில் துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் 2

## தேர்தல் வெற்றிக்காக அரசு வன்முறையைத் தூண்டுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 20

அரசு இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி வருகின்றது. அன்று பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் அடித்து உடைக்கப்பட்டன. அண்மையில் நாகவிகாரை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தேர்தல் வெற்றிக்காக வன்முறையைத் தூண்டும்செயற்பாட்டுகள் இடம்பெற்று வருகின்றன என்று முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சியின்யாழ்ப் 2

### வட்டுக்கோட்டை மக்கள் சந்திப்பில் விஜயகலா மகேஸ்வரன் குற்றச்சாட்டு



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கான ஏதுநிலைகள் கருக்கட்டி விட்டன.

கிழக்கில் தொல்லியல் விவகாரங்களைக் கையாளத் தனித்து சிங்களவர்களை மட்டும் கொண்ட ஒரு ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்திருக்கின்றமையை அடுத்து அது ஒரு புறம் தேசிய விவகாரமாக சூடு பிடித்திருக்கின்றது.

கிழக்குப் போன்று வடக்கிலும் அத்தகைய தொல்லியல் முக்கியத்துவமான இடங்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்காக வடக்கு ஜனாதிபதி செயலணி ஒன்றையும் ஜனாதிபதி கோட்டாபய நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை சில பிக்குமாரால் வலிமையாக எழுப்பப்பட்டு வருகின்றது. அதற்கான சாத்தியங்களும் தென்படும் நிலையிலேயே இப்போது வடக்கு அரசியலில் இவ்விவகாரத்தை ஒட்டி பெரும் அதிர்வலைகள் வெடிக்கும் சூழல் தென்படுகின்றது.

ஜனாதிபதி கிழக்குப் போன்று வடக்கிலும் ஒரு விசேட செயலணியை அறிவித்தால் கந்தரோடை உட்பட பல இடங்கள் மத்தியின் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் முழுமையாகப் போகும் ஆபத்து உருவாகும்.

அப்படிப் போகாமல் தடுப்பதற்குக் கிடைத்த அருமையான வாய்ப்பை முன்னாள் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் தமது மெத்தனப் போக்கினால் கோட்டை விட்டு விட்டார் என்று குற்றம் சுமத்துவதற்கு – அதனை முழு அளவிலான பிரசாரமாக மக்கள் முன் வைப்பதற்கு – சில அரசியல் தரப்புகள் தயாராகி வருகின்றன என்ற தகவல் கசிந்திருக்கின்றது.

விடயம் இதுதான்:–

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாணத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

அந்த அரசமைப்புத் திருத்தத்தில் மாகாண அரசுக்கு உரிய அதிகாரங்கள், மத்திய அரசுக்கு உரிய அதிகாரங்கள், இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் என இவை தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

★ முதலாவது – மாகாணங்களுக்கு உரிய பட்டியல் (Provincial List)

★ அடுத்தது – மத்திய அரசுக்கு உரிவை (Reserved List)

★ மூன்றாவது – இரண்டுக்கும் பொதுவானது. (Concurrent List)

இந்த மூன்றாவது பட்டியலிலே 36 விடயங்கள் உள்ளன. அதில் 34ஆவது விவகாரம் இந்த தொல்லியல் இடங்கள் பற்றியதாகும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என மத்திய அரசாங்கத்தினால் சட்டத்தின் மூலம் பிரகடனப்படுத்திய தொல்லியல் இடங்கள் தவிர்ந்த அனைத்து தொல்லியல் இடங்களும் மாகாணத்துக்குரியது என்கின்றது அந்தப் பிரிவு.

**தவராசா கருத்து**

*"இந்த விடயத்தை வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கவனத்துக்கு பல தடவைகள் கொண்டு வந்து, அந்தத் தொல்லியல் விவகாரம் தொடர்பான நியதிச் சட்டம் ஒன்றை நாம் மாகாண சபையில் நிறைவேற்றி சட்டமாக்கினால், அதனடிப்படையில் இத்தகைய தொல்லியல் இடங்களை நாம் மாகாண சபைக்குக் கீழான இடங்களாகப் பிரகடனப்படுத்தி விடலாம். காலம் தாழ்த்தினால் அவற்றில் கொழும்புதலையிடும் நிலைமை பின்னர் வரலாம். அதற்கு இடமளிக்காமல் இப்போதே மாகாண சபையில் உரிய சட்டத்தை நிறைவேற்றி, அத்தகைய இடங்களை அடையாளம் கண்டு பிரகடனப்படுத்தி விட்டால் அவை காலங்காலமாக மாகாண சபையின் கீழ் இருக்கும். தெற்கின் அநாவசிய தலையீட்டுக்கு இடமளிக்காமல் விடயத்தை மூடி அடைத்துவிடலாம் என்று பல தடவைகள் கூறினேன். அப்படி நான் வடக்கு மாகாண சபையில் கூறிய போதெல்லாம் ஏதோ உடனே அதை நிறைவேற்றப்போகின்றவர் போல முதலமைச்சர் விக்னேஸ்வரன் சபையில் தலையைக் குனிந்து குறிப்பு எடுப்பார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.*

*"இனி வடக்கு மாகாண சபை கூடுவதற்கு இடையில் தெற்கிலிருந்து வடக்கு விசேட ஜனாதிபதி செயலணி வந்தாலும், அதைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விடும்.*

*"நேரத்துடன் நாங்களே – வடக்கு மாகாண சபையே – தொல்லியல் நியதிச் சட்டங்களை உருவக்கி வடக்கில் கந்தரோடை உட்பட புராதன – தொல்லியல் – பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பிரகடனப்படுத்தியிருந்தால் அவை மத்திய அரசின் கீழ் போகும் ஆபத்தைத் தடுத்திருக்கலாம். எல்லாவற்றுக்கும் திறமையற்ற முதல்வர் விக்னேஸ்வரனின் செயற்றிறனற்ற உதாசீனப் போக்கே ஒரே காரணம்."* – என்று வைதாா் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

இந்த விடயத்தை விளக்கமாக விவரித்து அவரது அறிக்கை அடுத்த ஓரிரு நாளில் வெளியாகும் போது முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராக அரசியல் பீரங்கிகள் பல பக்கங்களில் இருந்தும் முழங்கும்.

நீதியரசர் விக்னேஸ்வரன் எப்படி சமாளிப்பார் என்று பார்ப்போம்...!

–மின்னல்–

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூடிய ஒரு வரைத் தான் கூட்டமைப்பின் தலைவராகத் தெரிவு செய் வோம் என்று கூறினார்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட முதன்மை வேட்பாளருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கொரோனா நோய் காரணமாக கடந்த மூன்று மாத காலமாக வடக்கு மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். நாம் தற்போது கூட சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றியே செயற்பட வேண்டும். மூன்று மாதங்களாக வடக்கு மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துள்ளனர். அரசானது தென்பகுதியிலிருந்து வடக்குக்கு உரிய நிவாரணங்களை உரிய வகையில் அனுப்பி வைக்கவில்லை. 5000 ரூபா கொடுப்பனவு கூட உரிய வகையில் வழங்கப்படவில்லை. தெற்கில் வீடு வீடாகச் சென்று 5000 ரூபாவை வழங்கியவர்கள் வடக்கில் மக்களை கவனிக்கவில்லை. முள்ளிவாய்க்கால் அனர்த்தத்தைப் போன்று கொரோனாவினாலும் மக்கள் அவதிப்பட்டனர். ஆனால் அரசானது கொரானாவுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தேர்தலை நடத்துவதிலேயே குறியாக நிற்கின்றது.

வடக்கில் யுத்தத்தின் போது பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்திருந்தோம். உயிர்களையும் சொத்துக்களையும் இழந்து நிர்க்கதி நிலையை அடைந்திருந்தோம். தற்போது மீண்டும் குடியேறி வாழும் நிலையில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்பார்த்த முடிவைப் பெற முடியவில்லை. இதனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நிலைமை மாறியுள்ளது. இந்த அரசானது தேர்தல் வெற்றிக்காக வன்முறைகளைத் தூண்ட முயல்கின்றது. இனவாதம், மதவாதத்தைப் பரப்பி வருகின்றது. இத்தகைய நிலைமை மாற்றப்பட வேண்டுமானால் நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு வித்திட வேண்டும். எமது வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் –என்றார்.

# ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், சாவகச்சேரியில் 2பேர் கைது

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் சாவகச்சேரியில் போதைப் பொருள் கைமாற்றம் நடப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அந்த இடத்தைச் சுற்றி வளைத்த போது 2 கிராம் ஹெரோயினுடன் கொடிகாமத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞனைத் தாம் கைது செய்தனர் என்று மாவட்டப் போதைத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீது 54–ஏ பிரிவில், போதைப் பொருள் கைமாற்றல் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொம்மைவெளியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் 540 மில்லி கிராம் ஹெரோயினுடன் அதே இடத்தைச் சேர்ந்த 30 வயதான சந்தேகநபரைத் தாம் கைது செய்தனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டு சந்தேகநபர் மீது பதியப்பட்டுள்ளது.

## மாகாணத் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் அதிகளவில் இடம் வழங்கவுள்ளது. அதிகளவு இளம் வேட்பாளர்கள் மாகாணத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம் – என்றார்.

## வாள்வெட்டுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைது செய்யப்பட்ட இருவரும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட வாளுடன் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடங்குகின்றனர். இதில் 901 பேர் கடற்படையினராவர்.

இதேவேளை, வெளிநாட்டுப் பிரஜைகள் 7 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வந்த 696 பேர் இதுவரை கொரோனாவுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,446 ஆக உயர்வடைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 491 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 43 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் அம்பாறை–கல்முனை பொலிஸ் நிலையத்தில் உள்ள அரச புலனாய்வுப் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணம், வடமராட்சி கரணவாய் மத்தி பிரதேசத்தைச் சேர்ந்த கே.கமலராஜ் (வயது –21) என்பவராவார்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள தேசிய புலனாய்வுப் பிரிவு காரியாலயத்தில் கடமையாற்றிவரும் இந்த உத்தியோகத்தர் சம்பவ தினமான நேற்று மாலை 6.30 மணியளவில் காரியாலயத்தில் தனிமையில் இருந்துள்ளார். இதன்போது பாதுகாப்புக்காக வைத்திருந்த கைதுப்பாக்கியால் தானே தலையில் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருவதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த வாரம் தென்மராட்சியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் தென்பகுதி பொலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

## வடக்கு- கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை வந்து நிலைமைகளை ஆராய்ந்ததன் அடிப்படையில் இந்த அறிக்கையை அவர் தயாரித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இராணுவத்தினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். ஊடகங்களும் பாதுகாப்பு அமைச் சால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் கிட்டத்தட்ட எல்லா நிறுவனங்களும் கண்காணிப்புக்கு உட்பட்டு வருகின்றன. அவர்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களைப் பொறுத்து கண்காணிப்புக்கள் தீவிரத் தன்மை வேறுபடுகின்றது.

தொலைபேசி அழைப்புகளைக் கண்காணித்தல், வீடு அல்லது அலுவலகத்துக்குப் பின்தொடர்தல், உளவுத்துறைகள் ஊடாக ஒளிப்பதிவுகளைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற வகையிலும் கண்காணிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் படைத் தரப்பினர் மற்றும் உளவுத்துறையினரால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான போராட்டங்களில் பங்கேற்போர் போராட்டங்களுக்கு முன்பும் பின்பும் அது குறித்து விசாரிக்கப்படுகின்றமையுடன், அச்சுறுத்தலுக்கும் ஆளாகின்றனர்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை உள்ளிட்ட உளவுத்துறை அதிகாரிகள் அடிக்கடி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குள் நுழைவது, கேள்விகளை எழுப்பி அவற்றின் உறுப்பினர்களை அச்சுறுத்தும் போக்கில் நடந்துகொள்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்துக்கு இரு மாதங்களுக்குள் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் 6 தடவைகள் விஜயம் செய்து விசாரித்துள்ளனர்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்பு பாதுகாப்புப் படையினருக்கும் புலனாய்வுத் துறையினருக்கும் அது குறித்து தகவல் அளிக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

நான் மேற்கொண்ட ஒரு சந்திப்பில் கூட சிவில் உடையில் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் பிரசன்னமாகியிருப்பது குறித்து சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் என்னை உார்படுத்தினார். சந்திப்பு நடைபெற்ற இடத்துக்கு வெளியே அந்தச் சந்திப்பில் பங்கேற்றவர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டனர்.

மற்றொரு இடத்தில் நான் பயணம் செய்த வாகனத்தின் இலக்கத்தை இராணுவத்தினர் அவதானித்துப் பதிவு செய்தமையைக் கவனித்தேன்.

அச்சுறுத்தலான ஒரு சூழலை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான கண்காணிப்புக்கள் இடம்பெறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பேணும் சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களைப் பழிவாங்கும் செயற்பாடாகவும் இந்தக் கண்காணிப்புக்கள் கருதப்படலாம்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள், அமைதியான போராட்டங்களில் பங்கேற்பவர்கள் மற்றும் ஏனைய தரப்பினர் கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது தொடர்பில் கிடைத்த அறிக்கைகள் கவலை அளிக்கின்றன.

இத்தகைய கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அவநம்பிக்கை மற்றும் அச்சமான சூழலை உருவாக்குகின்றன. இது சுய தணிக்கைக்கும் வழிவகுக்கின்றது– என்றுள்ளது.

# இரணைமடு முகாமிலிருந்து 71 சிப்பாய்கள் வெளியேறினர்








கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமிலிருந்து தனிமைப்படுத்தலை நிறைவு செய்துகொண்டு 71 கடற்படையினர் நேற்று வெளியேறியுள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமுக்கு வெலிசறைக் கடற்படை முகாமில் இருந்து கடந்த மே 20ஆம் திகதி தனிமைப்படுத்தலுக்காக கடற்படையினர் 167 பேர் அழைத்துவரப்பட்டனர்.

அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னர் கடந்த கடந்த ஜூன் 6ஆம் திகதி 70 பேர் தனிமைப்படுத்தல் நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

எஞ்சியுள்ள 97 கடற்படையினரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. பரிசோதனை முடிவுகளில் 71பேருக்கு கொரோனா தொற்று இல்லை என நேற்று முடிவுகள் கிடைக்க பெற்றதைத் தொடர்ந்து 71 பேரும் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறி உள்ளனர்.

எஞ்சியுள்ள 26 கடற்படையினரின் பரிசோதனைகளின் போது 4 பேருக்கு கொரோனா தொற்று உள்ளது என உறுதி படுத்தப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று உள்ளவர்களுடன் நெருங்கி பழகிய 22 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன. அதன் முடிவுகள் கிடைத்த பின்னர் அவர்களும் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வெளியேறவுள்ளனர் என இரணைமடு விமானப் படைக் கட்டளை அதிகாரி குறூப் கப்டன் றொகான் பத்திரண தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் 'கைக்கு' துரோகம் செய்தது 'மொட்டு'

## சு.க. பொதுச் செயலாளர் ஆதங்கம்

ஹற்றன், ஜூன் 20

**நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பொதுஜன பெரமுன அநீதி இழைத்துள்ளது என்று சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**



நேற்று ஹற்றனில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே தயாசிறி ஜயசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்டத்திலும் இரு கட்சிகளும் இணைந்து பயணித்திருக்கலாம். ஆனால் பொதுஜன பெரமுனவால் இந்த மாவட்டத்தில் எமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அதனாலேயே இங்கு தனித்துப் போட்டியிடுகின்றோம். இனிக் கவலைப்பட்டுப் பயனில்லை. இங்குள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கட்சியின் வேட்பாளர்களைத்தான் ஆதரிக்கவேண்டும். மாற்றுத் தரப்புகளுக்கு ஆதரவு வழங்கினால் கட்சி உறுப்புரிமை நீக்கப்படும். பிரதேச சபை உறுப்பினர்களாக இருப்பவர்களின் பதவி பறிக்கப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதக் கட்டடத்தை இடித்தழிக்க மன்று உத்தரவு

## திருநெல்வேலியில் திங்கள் உடைப்பு

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடத்தை இடித்தழிக்குமாறு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய நாளை திங்கட்கிழமை அந்தக் கட்டடம் இடிக்கப்படவுள்ளதாக சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்குப் பகுதியில் சபையின் எவ்வித அனுமதியும் எடுக்காது கட்டடம் ஒன்று கட்டப்பட்டது.

அந்தக் கட்டடத்திற்கு உரிய அனுமதியை எடுக்குமாறு சபையினால் பலமுறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எனினும் அந்தக் கட்டட உரிமையாளர் சபையிடம் இருந்து எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டடத்தைக் கட்டியுள்ளார்.

இதனால் சபையினால் கடந்த வருடம் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில் அதனை இடித்து அளிக்குமாறு நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டளைக்கு அமைவாக அக்கட்டடம் எதிர்வரும் திங்கட்கிழமை இடித்து அழிக்கப்படும் – என்று அவர் தெரிவித்தார்.

# ஞானசாரரின் உயிருக்கு அச்சுறுத்தலாம்!

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பாதுகாப்பு வழங்குமாறு, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக ஞானசார தேரர் வழங்கிய சாட்சியம் காரணமாக அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் எனத் தெரிவித்து ஆணைக்குழுவின் தலைவரும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசருமான ஜனக்க டி சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் ஞானசார தேரர் மூன்றாவது முறையாகவும் சாட்சியமளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாம்பல்தீவுக் களப்பின் பாதிப்புகள் குறித்து திருகோணமலை அரசஅதிபர் விசேட ஆய்வு





(எவ்.முபாரக்)

திருகோணமலை சாம்பல்தீவுக் களப்பு பல்வேறு பட்டவர்களால் பல சுற்றாடல் பாதிப்புகளை எதிர்நோக்கி வருவதாக சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கப் பட்டதத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன நேற்று துறை சார் அதிகாரிகளை மாவட்ட செயலகத்திற்கு அழைத்து விசேட கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

எதிர்வரும் தினங்களில் சாம்பல்தீவு களப்பிற்கு நேரடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் இணைந்து களவிஜயம் மேற்கொண்டு பரிசீலனை செய்யவுள்ளனர் எனவும் சட்டவிரோத நிர்மாணங்கள் மற்றும் சுற்றாடல் சார் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் அங்கு தெரிவித்தார்.

விரைவில் களப்பு,ஈர நிலங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான குழு ஸ்தாபிக்கப்பட்டு உயிர்ப் பல்வகைமை மற்றும் சூழலியல் கட்டமைப்புக்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இக்குழுவில் பிரதேச மக்களும் பங்குபெறல் வேண்டும். அப்போதுதான் அவை தொடர்பான சமகால நிலைவரங்களை உடன்அறிந்து உரியநடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். சாம்பல் தீவுகளப்பினை பாதுகாக்க உரிய திணைக்களம் மூலம் வர்த்தமானி அறிவிப்பை விடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். – என்று இதன்போது முன்மொழியப்பட்டது. இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ்,மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.சிவகுமார் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொல்லைக் கொடுத்து வாங்கிக் கட்டுவது

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்பார்கள்.

தேவையில்லாமல் – வேறு வேலையில்லாமல் – பிரச்சினையைத் தேடி வாங்கிக் கொண்டு வருவதை இப்படிக் கூறுவார்கள்.

*“வானத்திலை போன பிசாசை ஏணி வைச்சு இறக்கி மடியிலை கட்டின மாதிரி”* என்றும் பேச்சு மொழியில் கூறுவதுண்டு.

அப்படி ஒரு வேலையைத்தான் அரச புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே செய்திருக்கின்றாரோ என்று தோன்றுகின்றது.

‘தாஸ்’ படத்தில் ஒரு நகைச்சுவைக் காட்சி. அனேகமாக எல்லோரும் பார்த்து ரசித்திருப்பார்கள். மனதிலும் நீங்காமல் நிற்கும். ஏமாளியான வடிவேலு டீக்கடைக்கு வருவார். அங்கு அவருக்குப் பக்கத்தில் வெள்ளையும் சொள்ளையுமாக ஆஜபாகுவான தோற்றத்தில் இருக்கும் மனிதரை, ஒரு வாண்டுப் பையன் தூரத்திலேயே நின்று ‘தடியா’, ‘எருமை’, ‘பண்ணி’ என்றெல்லாம் அழைப்பான். அவரே சத்தமின்றி சகித்துக் கொண்டு அடங்கி இருப்பார். ஆனால் வடிவேலுவோ சீற்றமுற்றுப் பொடியனைத் துரத்தப் புறப்படுவார். வடி வேலுக்கு டிமிக்கி கொடுத்து ஓடுபவன் போல ‘பாவ்லா’ காட்டும் சிறுவன், கடைசியாக ஓர் அன்புலன்ஸுக்குள் போய்ப் புகுவான். பின்னால் கலைத்துக் கொண்டு போகும் வடிவேலும் அன்புலன்ஸில் சிக்கிக் கொள்வார். அவரை அங்கு மடக்கி ஒரு பக்க சிறுநீரகத்தை (கிட்னியை) அறுவை சிகிச்சை செய்து எடுத்து விடுவார்கள். – இது தான் அந்த நகைச்சுவைக் காட்சி.

சிறுவன் வைத்த வலையில் வடிவேலு விழுந்த மாதிரி உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேசத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் யஸ்மின் சூகா விரித்த வலையில் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே வீழ்ந்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

யஸ்மின் சூகா தம் மீது அவமானக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கின்றார் என ஐக்கிய நாடுகள் சபையிடமும், ஐரோப்பிய ஒன்றியத்திடமும் முறைப்பாடு செய்திருக்கின்றார் சுரேஷ் சாலே.

‘பொல்லைக் கொடுத்து அடி வாங்குகின்ற ஏற்பாடு’ போலவே இந்த முயற்சி தோன்றுகின்றது.

இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் சர்வதேச ரீதியிலான நீதி விசாரணை ஒன்றின் மூலம் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்பதே சர்வதேச தரப்புகளினாலும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளினாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் இந்த விவகாரம் இலங்கையின் இறைமை சம்பந்தப்பட்டது, இதை சர்வதேசத் தரப்புகளோ, நாட்டிற்கு வெளியில் உள்ள தரப்புகளுக்கோ விசாரணை செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசு திரும்பத் திரும்பக் கூறி வருக்கின்றது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், யுத்தக் குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களுக்கும் இன்னும் பொறுப்புக் கூறல் முன்னெடுக்கப்படவில்லை.

இப்போது பந்தைத் தூக்கி சர்வதேசத்தின் களத்துக்குள் போட்டிருக்கின்றார் இலங்கை அரச புலனாய்வுத்துறை யின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே.

இலங்கை அரசுக்கு எதிராக வெறுமனே யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் இராஜதந்திரி அல்லர் சூகா.

யுத்தத்தின் முடிவில் இலங்கையில் நடந்தவைகள் தொடர்பில் விசாரிப்பதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் நியமித்த மூன்று நிபுணர்கள் அடங்கிய குழுவில் அவரும் ஒருவர்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் அந்தக் குழு 2011 மார்ச்சில் தனது அறிக்கையை ஐ.நா. செயலாளரிடம் சமர்ப்பித்தது. அதுவே தருஸ்மன் அறிக்கை எனப்படுகின்றது. அந்த அறிக்கை இலங்கை அரசு மீது ஆறு குற்றச்சாட்டுக்களை வலிமையாக அடுக்கியது.

இந்த ஆறு குற்றச்சாட்டுகளுக்கும் காரணமான – அடிப்படையான – அம்சங்கள், சாட்சியங்கள், முறைப்பாடுகள், புலனாய்வு விவரங்கள் எல்லாம் – சூகா அம்மையாரிடம் நிச்சயம் இருக்கும்.

ஐ.நாவிடமும் ஐரோப்பிய ஒன்றியத்திடமும் இலங்கை அரச புலனாய்வுத்துறைப் பணிப்பாளரே விடயத்தை – சர்ச்சையை – கொண்டு போய் இருப்பதால், அந்த சர்ச்சைக்கான விசாரணைக்கு அவர் முகம் கொடுக்க வேண்டியிருக்கும். சூகா அம்மையார் சரியாகப் பந்து வீசி எல்லா விடயங்களையும் சர்வதேச அரங்கிலேயே அவிழ்த்துப் பிய்த்துப் பிடுங்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

இப்படி சர்வதேச அரங்கில் தாம் செய்திருக்கும் முறைப்பாட்டில் இருந்து சுரேஷ் சாலே விலகாதவரை இந்த விவகாரம் மூலம் யுத்த காலத்தின் உண்மைகள் அம்பலமாக சரியான வாய்ப்பு நீடிக்கும்.

இலங்கைத் தரப்பைப் பொறுத்தவரை இது பொல்லைக் கொடுத்து வாங்கிக் கட்டும் விவகாரம் போல முடிந்தாலும் முடியும்.

# கூட்டமைப்புக்குள் உள்ள சிலரே எம்மை பலவீனமாக்குகிறார்கள்

## ஆதங்கப்படுகின்றார் செல்வம் அடைக்கலநாதன்




மன்னார், ஜுன்29

தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு ஒரு சிலர் கூட்டமைப்பைப் பலவீனப் படுத்துகின்ற, நம்பிக்கை அற்ற நிலைப்பாட்டை உருவாக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே யாரை தெரிவு செய்யவேண்டும், யாரைத் தெரிவு செய்யக்கூடாது என்கின்ற தீர்மானத்தை எடுப்பது மக்களாகிய உங்கள் கைகளில் உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நிச்சயமாகக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இன்று சுமார் 400 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இந்த வேட்பாளர்கள் சுயேச்சைக் குழுக்களிலும், அரசோடு மறைமுகமாகச் சொந்தம் கொண்டாடுகின்றவர்களும் கள மிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப் படுத்தும் ஒரு செயற்பாடாகவே இந்தச் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் மறைமுகமாக அரசோடு செயற்படுகின்றவர்கள் போட்டியிடுகின்றனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைப் பலவீனப் படுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

சுயேச்சைக் குழுக்களிடமும் அரசோடு மறைமுகமாகச் சொந்தம் கொண்டாடுகின்றவர்களிடம் நான் ஒன்றை கேட்கின்றேன். வடக்கு, கிழக்கில் குறிப்பாக வன்னி மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பிரசன்னத்தைக் கட்டுப்படுத்த முடியுமா?

இன்று கொரோனா வைரஸை சாட்டாக வைத்து வடக்கு – கிழக்கில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் தென் பகுதியில் இவ்வாறான சோதனைச் சாவடிகள் இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இனத் துவேச அடிப்படையில் அடக்குமுறையைக் கொண்டு வருகின்ற சூழலை உருவாக்கி உள்ளனர்.

புதிய ஜனாதிபதியாக வந்துள்ள கோட்டபாய மற்றும் தற்போதைய பிரதமர் ஆகியோர் எங்கள் மக்கள் சார்ந்த பிரச்சினைகளில் எந்த ஓர் அக்கறையையும் காட்டாதவர்களாகத்தான் இருந்து கொண்டு இருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு ஒரு சிலர் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடு படுகின்றனர்.

எனவே யாரை தெரிவு செய்யவேண்டும், யாரை தெரிவு செய்யக்கூடாது என்ற தீர்மானத்தை எடுப்பது உங்கள் கைகளில் உள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உருவாக்கம் புனிதத்துடன் கூடிய விடயமாக இருக்கின்றது. அதற்கான ஒரு சாட்சியாக நான் இன்றைக்கும் உயிரோடு இருக்கின்றேன்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட பின்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடம் மாறவில்லை – என்றார்.

# மத்திய கிழக்கில் 3 மாதங்களில் 23 இலங்கையர் பரிதாப மரணம்

## கொரோனாத் தொற்றே காரணம்

மத்திய கிழக்கு நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த 03 மாதங்களில் 23 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

டுபாயில் 07 உயிரிழப்புகளும், அபுதாபியில் ஒரு உயிரிழப்பும் சம்பவித்துள்ளன. அதற்கமைய, ஐக்கிய அரபு இராச்சியத்திலேயே அதிகளவான உயிரிழப்புகள் சம்பவித்துள்ளன.

ஏனைய உயிரிழப்புகள் குவைத், சவூதி அரேபியா, ஓமான் ஆகிய நாடுகளில் சம்பவித்துள்ளன.

அவர்களில் எத்தனை பணிப்பெண்கள் அடங்குகின்றனர் என்று இன்னும் தங்களுக்குத் தெரியவரவில்லை எனவும் வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கடந்த 03 மாதங்களில் உயிரிழந்த 23 பேரின் இறுதிக்கிரியைகள், கொரோனா வைரஸ் தொற்றால் எழுந்துள்ள சுகாதார நிலைமைகளைக் கருத்தில்கொண்டு அந்நாடுகளில் இடம்பெற்றுள்ளன என்று தெரிவித்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், தற்போதைய நிலைமையைப் புரிந்துகொண்ட இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இதற்கு இணங்கினர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# கிளிநொச்சியில் மழை கிட்டியதால் 4 குளங்களின் கீழ் இடைப்போகம்!

யாழ்ப்பாணம், ஜுன்20

நாட்டில் ஏப்பிரல் மாதம் கிட்டிய மழை வீழ்ச்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் 4 குளங்களின் கீழ் இடைப்போகமாக சிறிதானிய விதைப்பு மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதாக மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏப்பிரல் மாதம் ஒரு வாரம் மழை வீழ்ச்சி ஏற்பட்டது. இதன் காரணமாக சிறுபோகத்திற்கான நீர் பூட்டப்பட்டதோடு நீர் வரத்தும் 2 அடி அதிகரித்தது . இதனால் மாவட்டத்தில் தற்போது விதைக்கப்பட்டுள்ள 15 ஆயிரத்து 325 ஏக்கர் வயற் செய்கைக்கும் மேலதிகமாக நீர் காண்ப்படும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக இடம்பெற்ற விவசாய குழுக் கூட்டத்தின் பிரகாரம் 3 ஆயிரம் ஏக்கர் சிறுதானியம் மேற்கொள்ள முடியும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கமைய இடங்களை இனம்காணுமாறு கூறப்பட்டுள்ளது.

இதேநேரம் மாவட்டத்தில் வன்னேரி குளத்தின் கீழ் – 120ஏக்கரும் ,அக்கராயன் குளத்துன் கீழ் 100 ஏக்கரும் , புதுமுறிப்பு குளத்தின் கீழும் 100 ஏக்கரும் சிறுதானிய இடைப்போகம் அனுமதிக்கப்பட்டுள்ள அதேநேரம் கலமடுக் குளத்தில் நீர் உள்ளபோதிலும் அதற்கான நிலம் இன்மை காரணமாக இடைப்போகம் மேற்கொள்ள முடியவில்லை. – என்றார்.

# கொரோனா வைத்தியசாலை அக்கராயனில் அமைக்காதீர்!

## நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்





கிளிநொச்சி, ஜூன் 20

அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலையை கொரோனா வைத்தியசாலையாக மாற்றவேண்டாம் எனவும் பொருத்தமான வைத்தியசாலையினை தெரிவு செய்யுமாறும் கோரி நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்கராயன்குளம் பிரதேச வைத்திய சாலையை வடக்கு மாகாண கொரோனா வைத்தியசாலையாக மாற்றவேண்டாம் என்று பிரதேச மக்கள் சிலர் பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு முன்னால் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அக்கராயன் குளம் பிரதேச வைத்தியசாலையை வடக்கு மாகாண கொரோனா வைத்தியசாலையாக மாற்றவேண்டாம் என்று அண்மையில் 20 அமைப்புகள் இணைந்து மாவட்ட அரசஅதிபர் ரூபவதி கேதீஸ்வரனுக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளன.

இதேபோன்று கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் அக்கராயன்குளம் பிரதேச அமைப்புகளும் தங்களது ஒருமித்த எதிர்ப்பை தெரிவித்திருந்தன.

ஆனால் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கப் பெறாத காரணத்தினால் பிரதேச அமைப்புகள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள், எங்கள் வைத்தியசாலை எங்களின் சொத்து, அதனை இழக்க மாட்டோம், பயன்பாட்டில் உள்ள ஒரு வைத்தியசாலையை முடக்கவேண்டாம், மிகப்பெரிய சேவை வழங்கிய வைத்தியசாலை இல்லாமல் போனால் மக்களுக்கு மனதளவில் பாதிப்பு ஏற்படும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ந.சரவணபவன் சந்தித்துப் பேசினார். இது தொடர்பான விடயங்கள் அனைத்தையும் தான் வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளருக்குத் தெரியப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

## கன்னியா தளத்தில் கொட்டும் குப்பைகளை உணவாக உட்கொள்ளும் 42 யானைகள்



(எவ்.முபாரக்)

திருகோணமலையில் கன்னியா பிரதேசத்தில் உள்ள குப்பைகள் கொட்டும் தளத்தில் கொட்டப்படும் குப்பைகளை 42 யானைகள் உணவாக உட்கொள்ளும் பழக்கத்தை கொண்டுள்ளன என அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து நாளாந்தம் பதினான்கு டிரக்டர் குப்பைகளும் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து பன்னிரெண்டு தடவைகளும் திருகோணமலை கடற்படை தளத்தில் இருந்து ஆறு தடவைகளும் இங்கு தினசரி எடுத்து வரப்படுகின்றன. தவிரவும் பிரிமா மா ஆலை மற்றும் மிட்சிபிஸி சிமெந்து நிறுவனத்தின் குப்பைகளும் நாளாந்தம் கொட்டப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முப்பத்திரெண்டு ஏக்கர் நிலப்பரப்புடைய இந்த குப்பை கொட்டும் தளத்திற்கு நாளாந்தம் கொட்டப்படும் குப்பைகளைபிரித்துஎடுக்கும் நடைமுறையானதுதற்போது பின்பற்றப்படுவதில்லை.

இந்நிலையில் இவ்வாறு பிரிக்கப்படாத குப்பைகளை உணவாக உண்டு பழக்கப்பட்ட யானைகள் குப்பைகளோடு கலந்துள்ள பிளாஸ்டிக், ரப்பர், பொலித்தீன் போன்ற சமிபாடு அடைய முடியாத பொருள்களை உணவாக உட்கொள்வதை அன்றாடம் காணக்கூடியதாக இருப்பதாக அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை இந்த யானைகள் பலநேரங்களில் மக்கள் வசிக்கும் பிரதேசங்களுக்கு புகுந்து சேதங்களை விளைவிப் பதாகவும் பயன்தரும் மரங்களை அழித்துச் செல்வதாகவும் அப்பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குப்பைகொட்டும் தளத்திற்கு யானைகளின் வரவை கட்டுப்படுத்துவதன் மூலம் யானைகளின் எண்ணிக்கையைத் திருகோணமலை மாவட்டத்தில் அதிகரிக்கச் செய்யலாம்.

இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவுன் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர.

## சிலாவத்துறை கடற்கரைப் பகுதியில் இட உரிமைச் சிக்கலினால் பதற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்20

மன்னார் சிலாவத்துறை கடற்கரையில் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கும் மேலதிகமாக இடங்களை அபகரிக்க முயன்ற மன்னார் மீனவர்களினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

மன்னார் சிலாவத்துறை பகுதியில முஸ்லிம் மீனவர்களிற்கு 800 மீற்றர் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அப்பிரதேசங்களிற்கு வெளியே சுமார் 15 படகுகளை கொண்டு வந்து இறக்கியமையினால் அதன் அருகே தொழிலில் ஈடுபடும் மீனவர்களால் இவ்விடயம் மாவட்ட சமாசம் மற்றும் மீன்பிடி நீரியல் வளத்துறை திணைக்களம் ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனால் சகல தரப்பினருடன் பிரதேச செயலாளரும் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று இருதரப்பினருக்கும் இடையில் சமரச முயற்சியில் ஈடுபட்டு தீர்வை முன்வைத்தனர்.

இதன் பிரகாரம் இவ்வாறு 15 படகுகளும் இறக்கப்பட்ட இடம் மாதகலைச் சேர்ந்த சோமீயாஸ் மீனவர் சங்கத்திற்கு சொந்தமான பிரதேசமாகும். ஆகையினால் அச்சங்கம் அந்த இடத்தை வழங்கச் சம்மதம் தெரிவித்தால் தற்காலிகமாக அது வழங்கப்படும் எனத் தெரிவித்து இடைக்காலத் தீர்வு எட்டப்பட்டது.

## புதூர் நாகதம்பிரான் ஆலயப் பொங்கலுக்கு மக்களை வரவேண்டாம் என வேண்டுகோள்

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழாவில் 80 பேர் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், வெளி இடங்களில் இருந்து மக்களை வரவேண்டாம் எனவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துல சேன தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் திங்கள் கிழமை இடம்பெறவுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக இந்த வருடம் பொங்கல் விழாவில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி 80 நபர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொங்கல் விழாவிற்கு எந்த ஒரு பகுதியிலிருந்தும் மக்களை வருகை தர வேண்டாம் எனக் கோருகின்றோம். அதனை மீறி வருகை தரும் மக்களை திருப்பி அனுப்புவதற்குரிய நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளோம்.

நேர்த்திக்கடன்களை தங்களுடைய பகுதியில் உள்ள ஆலயங்களில் மேற்கொள்ளுமாறு பொதுமக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

பொங்கல் நிகழ்வை ஒட்டிய சுகாதார நடைமுறைகள், போக்குவரத்து வசதி, தண்ணீர் வசதி என்பன மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன். பொதுமக்களுக்கு அனுமதி



மறுக்கப்பட்டுள்ளது. அதனை மீறி வருபவர்களை பொலிஸாரின் உதவியுடன் திருப்பி அனுப்பவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

இந்த வருடாந்த உற்சவம் முக்கியமான நிகழ்வுகளை மாத்திரம் உள்ளடக்கி மிகவும் எளிமையான முறையில் இடம்பெறவுள்ளது. - எனவும் அவர் தெரிவித்தார்.

## ஆஸ்திரேலியாவிலிருந்து 98 பேர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஜூன் 20

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருந்து 98 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள் ளனர்.

இவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். 605 விமானத்தின் மூலம் மெல்போர்ன் நகரில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்றுக் காலை வந்தடைந்தனர் என விமான நிலையக் கடமைநேர முகாமையாளர் தெரிவித்தார்.

நாடு திரும்பிய இவர்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடமையில் உள்ள விமானப்படை வீரர்களினால் தொற்று நீக்கல்செயல்முறைக்குஉட்படுத்தப்பட்டமையுடன் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ‘தங்கிலிஸ்’ நிறுத்தம்!

தமிழ்நாட்டில் உள்ள ஊர்கள், இடங்களின்பெயர்களைத்தமிழ் உச்சரிப்புக்கு ஏற்ப ஆங்கிலத்தில் ஒலிக்கும் வகையில் திருத்தி வெளியிடப்பட்ட அரசாணை திரும்பப் பெறப்படுவதாகத் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் கே. பாண்டியராஜன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள ஊர்கள், இடங்களின் பெயர்கள் தமிழ் உச்சரிப்புப் போலவே ஆங்கிலத்திலும் அமையும் வகையில், பெயர்களைத் திருத்தி அரசாணை ஒன்றை ஜூன் பத்தாம் திகதி தமிழக அரசு வெளியிட்டது.

அதன்படி, சென்னை, கடலூர், சிவகங்கை, திருவள்ளூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தூத்துக்குடி, பெரம்பலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், விருதுநகர், கரூர், சேலம், தஞ்சாவூர், விழுப்புரம், வேலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 18 ஊர்களின் ஆங்கிலப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே மாற்றப்பட்டதாக அந்த அரசாணை தெரிவித்தது.

இந்த நிலையில், தற்போது அந்த அரசாணைதிரும்பப்பெறப்பட்டுள்ளதாகத்தமிழ்வளர்ச்சித்துறைஅமைச்சர் கே. பாண்டியராஜன் தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# 10 சிப்பாய்களை விடுவித்தது சீனா

பீஜிங்,ஜுன் 20

சிறைப்பிடிக்கப்பட்ட இந்தியச் சிப்பாய்கள் 10பேரைச் சீன இராணுவம் விடுவித்துள்ளது. லடாக் எல்லையின் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் நடந்த மோதலைத் தொடர்ந்து எல்லைப் பதற்றத்தைத் தணிப்பதற்காக இரு தரப்பு அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வரும் சூழலில் இந்தப் பத்துப்பேரையும் சீனா விடுவித்தது.

உயர்மட்ட அதிகாரிகள் மட்டத்தில் கடந்த 16ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்ற பேச்சுகளின் முடிவில், சீனாவால் சிறைப்பிடிக்கப்பட்ட 2 உயர் அதிகாரிகள் உட்பட 10 இந்தியச் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அவர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் இது குறித்து எந்தத் தகவலும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# ரஷ்யா, சீனாவுடன் சந்திப்பு நடக்கும்

அடுத்த வாரம் திட்டமிடப்பட்டுள்ள ரஷ்யா மற்றும் சீனாவுடனான முத்தரப்பு சந்திப்பில் இந்தியா பங்கேற்கும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

இந்திய – சீன எல்லை மோதலுக்கு முன்பாகத் திட்டமிடப்பட்டிருந்தது இந்தச் சந்திப்பு. இதில் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் கலந்து கொள்வார் என்று அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவாஸ்தவா தெரிவித்தார்.

எல்லை மோதலுக்கு இந்தியாவும் சீனாவும் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டியுள்ள நிலையில் இந்தச் சந்திப்புக்குறித்த செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் இந்திய இராணுவத்தினர் ஆயுததாரிகள் மீது துப்பாக்கிச் சூடு!

ஜம்மு காஷ்மீரில் இந்திய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆயுததாரிகள் 3பேர் கொல்லப்பட்டனர். ஜம்மு கா;மீரின் புல்வாமா மாவட்டம், பாம்போர் அருகே உள்ள மீஜ் கிராமத்தில் இந்தச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

குறித்த பகுதியிலுள்ள மசூதி ஒன்றுக்குள்ளே பதுங்கி இருந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் அவர்களது தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தியபோதே ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்றும் இந்திய இராணுவச் செய்திகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# இராமர் கோயில் கட்டுமானம் நிறுத்தம்

எல்லைப் பகுதியில் இந்திய, சீன இராணுவத்தினர் இடையே நடந்த மோதலால் பதற்றம் அதிகரித்திருப்பதையடுத்து, அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் பணியை நிறுத்தி வைத்துள்ளதாக ராமர் கோயில் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி அயோத்தி வழக்கில் தீர்ப்பளித்த இந்திய உச்ச நீதிமன்றம் அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தில் ராமர் கோயில் கட்ட அனுமதி வழங்கியும், கோயில் கட்டுவதற்கு அறக்கட்டளையை மத்திய அரசு 3 மாதங்களுக்குள் உருவாக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது. இதன்படி முன்னெடுக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நிறுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து தற்போது ஏற்பட்டுள்ள எல்லை மோதல் பதற்றத்தால் அந்தப் பணிகள் மீண்டும் நிறுத்தப்பட்டுள்ளன.

# சீனப் பிரதமரான கிம் ஜோங் உன் இந்தியர்களின் கேலிச் செயல் இது



இந்தியா – சீனா எல்லைக் கைகலப்பில் இந்திச் சிப்பாய்கள் சாவடைந்ததையடுத்து இந்தியாவில் சீனாவுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

சினாவின் பொருள்களுக்குத் தடை, மற்றும் சீன விளம்பரங்களுக்குக் கரி பூசல், சீனா குறித்த வசை பாடல் என இந்தியர்கள் இவற்றில் உச்சம் கண்டிருக்கிறார்கள். இந்த உச்ச உணர்வு மேலீட்டால் அங்கு நகைச் சுவையான சம்பவம் ஒன்றும் பதிவாகியுள்ளது. மேற்கு வங்கம் – அசனால் பகுதியில் பா.ஜ.க. தொண்டர்கள் சிலர் ‘சீனாவைப் புறக்கணிப்போம்’என்றுகோஷமிட்டுக்கொண்டே வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் உருவபொம்மையை எரித்துள்ளனர்.

சீனஅதிபருக்கும்வடகொரியஅதிபருக்கும் வித்தியாசம் தெரியாமல் அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டமையானது கேலிக்குள்ளாகியிருக்கிறது.

# எல்லை மோதல் குறித்து என்ன சொல்கிறது பாக்.?

இஸ்லாமபாத்,ஜீன் 20


இந்திய, சீன இராணுவத்தினருக்கு இடையே எல்லையில் நடந்த கைகலப்பு பாகிஸ்தானில் பெரிதும் பேசப்பட்டது. பாகிஸ்தானில் வெளியாகும் ஆங்கில மற்றும் உருதுப் பத்திரிகைகளில் இதுதான் முதற்பக்கச் செய்தி. ‘டெய்லி நவா – இ – வாக்ட் என்ற பத்திரிகையில், ’சீன இராணுவத்தை தாக்கியதால் பெரும் விளைவை இந்தியர்கள் எதிர்கொண்டனர்.

ஒரு தளபதி உட்பட இந்தியப் படையினர் 20 பேர் கொல்லப்பட்டனர்.’ என செய்தி வெளியிடப்பட்டது. டெய்லி ஜாங்ஸ் என்ற பத்திரிகையின் தலைப்பு: ‘இந்திய ஊடுருவல்: ஒரு தளபதி உட்பட இந்திய இராணுவத்தினர் 20 பேர் கொல்லப்பட்டனர்’ என்றமைந்தது.

இது குறித்த செய்திகள் சமூக ஊடகங்களில் அதிகம் பரவியது. இந்தியப் பிரதமர் மோடி மீது குற்றம் சுமத்தப்பட்டது. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜூ மெஹமூத் குரேஷீ, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் –

இந்த மோதல் இந்திய அரசின் இந்துத்துவக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டது,’ என்று தெரிவித்தார்.







# கல்வான் நதிக்கு அணை கட்டுகிறது சீனாத் தரப்பு!

புதுடெல்லி,ஜுன் 20

இந்தியா – சீனா எல்லையில் தற்போது மோதல் ஏற்பட்ட கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் பெரிய அளவில் இராணுவச் சிப்பாய்களையும் கட்டுமானச் சாதனங்களையும் சீனா இறக்கியுள்ளதாகசெயற்கைக்கோள்படங்கள் தெரிவிக்கின்றன.

சீனா இராணுவம் அங்கு அணைக்கட்டவிருக்கின்றது என்று சில செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அந்தப் பகுதிச் செயற்கைகோள் படங்களில் பலலொறிகளில் கட்டுமானப்பொருள்களுடன் இராணுவப்படைகளும் அங்கு குவிக்கப்பட்டுள்ளன.

இவற்றை ஆதாரமாகக் கொண்டே அந்தப் பகுதியிலுள்ள கல்வான் நதியை மறித்துச் சீனா அணைகட்டவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஹொங்கொங்கிலிருந்து வருபவர்களுக்கு அலுவலகம் அமைக்கவுள்ளது தாய்வான்

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங் கொங்கிலிருந்து வெளியேற நினைப்பவர்களுக்கு உதவுவதற்காகப் பிரத்தியேக அலுவலகத்தை அமைக்கவுள்ளதாகத் தாய்வான் தெரிவித்துள்ளது.

ஹொங்கொங்கில் பல மாதங்களாக சீனவுக்கு எதிராக ஜனநாயக சார்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. ஹொங்கொங் மக்கள் மத்தியில் கட்டுப்பாடுகளை கடுமையாக்குவது,

அவர்களின் ஜனநாயக அபிலாஷ்களைத் தூண்டிவிடுவது போன்ற காரணங்களால் அங்கிருந்து வெளியேறும் ஹொங்கொங் மக்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தாய்வான் ஜனாதிபதி சாய் இங் - வென் உறுதியளித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்போது ஹொங்கொங்கின் சுதந்திரங்கள் கட்டுப்படுத்தப்படுகிறது எனும் கூற்றை மறுத்த சீனா, தாய்வானின் இந்த அறிவிப்பைக் கண்டித்துள்ளது. கொரோனா பரவல் காரணமாகத் தாய்வானின் எல்லைகள் மூடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.





இனவெறி எதிர்ப்பின் எதிரொலி

## சிலையை அகற்றுகிறது ஒக்ஸ்போர்ட் பல்கலை!

தென்னாப்பிரிக்காவில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்ட பெருவணிகராகவும் அரசியல்வாதியாகவும் விளங்கிய பிரித்தானிய வணிகரான சிசில் ரோட்ஸின் சிலையை அகற்றுவதற்கு பிரிட்டனின் ஒக்ஸ்பேரட்டிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்று தீர்மானித்துள்ளது.

அந்தக் கல்லூரிக் கட்டடத்தின் முன்பகுதியில் உள்ள இந்தச் சிலை இனவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு இலக்காக உள்ளது என்றும் இந்த முடிவு சுயாதீனமாக எடுக்கப்பட்டது என்றும் குறித்த பல்கலை நிர்வாகம் தெரிவிக்கிறது.

## கடலில் பவளப் பாறைகளை நடுகிறது ஐ.அரபு இராச்சியம்





ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிழக்குக் கடற்கரையில் பாறைகளிலிருந்து பவளத்தை துண்டுகளாக வெட்டி அவற்றைக் கடலில் நடவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைராவில் உள்ள டிப்பா துறைமுகத்துக்கு அருகில் இந்தப் பணி முன்னெடுக்கப்படுகிறது. செயற்கைத் திட்டுகளை உருவாக்கி இந்தப் பவளப்பாறைகள் வளர்க்கப்படவிருக்கின்றன.

காலநிலை மாற்றம் மற்றும் மனிதச் செயற்பாடுகளால் சீரழிந்த கடல் உயிரிகளின் வாழ்வில் இதன் மூலம் எழுச்சி கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. கடந்த ஆண்டில் சுமார் 600 சதுர மீற்றருக்கு மேல் 9 ஆயிரம் பவளங்களை நடப்பட்டுள்ளன.

இவை கடல் உயிரினங்களின் உயிர்வாழ்வுக்கு முக்கியமானவை, அதே நேரத்தில் கடல் அரிப்புகளைக் குறைக்க உதவும் அலைகளுக்கு எதிரான தடையாகச் செயற்படுகின்றன.

## புடினுக்கு வைரஸ் தொற்றாதிருக்க தனிமைப்படுத்தப்படும் சிப்பாய்கள்!

ரஷ்யாவின் ரெட் சதுக்கத்தில் ஜூன் மாதம் 24ஆம் திகதி நடக்கவிருக்கின்ற இராணுவ அணிவகுப்பில் பங்குபற்றுகின்ற இராணுவத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ அணிவகுப்பின்போது இவர் கள் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை அணுகுவார்கள் என்பதால் தங்கள் சொந்த ஆரோக்கியத்தையும் மற்றவர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்காகப் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனிக்கு எதிராக ரஷ்யா வெற்றியீட்டிய 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுளள்ள இந்த அணிவகுப்பு மே மாதம் 9 ஆம் திகதி திட்டமிடப்பட்டு, கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

அந்த அணிவகுப்பில் பங்குபற்றுகின்ற சிப்பாய்கள் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நடவடிக்கை புடினுக்கு வைரஸ் வராமல் பாதுகாக்க உதவும் என்று ரஷ்ய அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.









## அகதிகளைக் கடலுக்குள் விட்டுவிட மலே. தீர்மானம்

மலேசியக் கடற்படையால் கடலில் மீட்கப்பட்ட ரோஹிங்கிய அகதிகளைத் திரும்பவும் கடலில் விட்டுடுவதற்கு மலேசியத் தரப்பில் தீர்மானிக்கப்பட்டு வருவதாத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜூன் மாதம் 8ஆம் திகதி மலேசியாவுக்குள் நுழைந்த 269 ரோஹிங்கியா அகதிகளைத் திரும்ப அழைத்துச் செல்லுமாறு பங்களாதேஷிடம் மலேசியா கோரியிருந்தது. பங்களாதேஷ் அதிகாரிகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்தனர்.

இந்த நிலையிலேயே அகதிகளின் படகு சரி செய்யப்பட்ட பின்னர் கைதிகளை மீண்டும் கடலுக்கு அனுப்பும் திட்டத்தை அதிகாரிகள் வகுத்துள்ளனர் என்று மலேசியப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தற்போதைய திட்டமாயினும் இதுவரை இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. அவர்களைக் கடலுக்குள் விடும் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டால் கடலில் விடப்படுகின்ற அவர்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மலேசியாவின் முடிவு

மியான்மரில் துன்புறுத்தல்களில் இருந்து தப்பி ஓடும் ரோஹிங்கியாக்களுக்கு சாதகமான இடமாகப் பங்களாதேஷ் உள்ளது. ஏராளமான அகதிகள் அங்கு தஞ்சமடைந்துள்ளனர். மியன்மாரிலிருந்து தப்பிச் செல்லும்போது மலேசியக் கடல் எல்லைக்குள் அவர்கள் நுழைவதும் நடக்கிறது.

ஆரம்பத்தில் மலேசியா அந்த அகதிகளுக்குத் தஞ்சமளித்தது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எல்லைக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கிய பின்னர் ரோஹிங்கியா அகதிகளை இனி ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று மலேசியா கூறியுள்ளது.

# உள்ளூராட்சித் தேர்தல் ஏற்படுத்திய உத்வேகம்!



**ந.லோகதயாளன்**

இலங்கையில் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் இருந்து 13 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 8 லட்சத்து 58 ஆயிரத்து 861 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி), வன்னி (வவுனியா, மன்னார், முல்லைத்தீவு) என 2தேர்தல் மாவட்டங்கள் உண்டு. இவற்றில் 5 நிர்வாக மாவட்டங்கள் உள்ளன. இதில்



யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட யாழ். நிர்வாக மாவட்டத்தில் பிரிவில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 584 வாக்காளர்களும், கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் 92 ஆயிரத்து 264 வாக்காளர்களு மாக 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர் வாக்காளிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதன் மூலம் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யவுள்ளனர். இதேபோன்று வன்னித் தேர்தல் மாவட்டத்திலே உள்ளடங்கும் மூன்று நிர்வாக மாவட்டங்களில் வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 811 வாக்காளர்களும் , மன்னார் மாவட்டத்தில் 88 ஆயிரத்து 842 வாக்காளர்களும் உள்ள அதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 ஆயிரத்து 360 வாக்காளர்கள் என எல்லாமாக 2 லட்சத்து 87 ஆயிரத்து 13 வாக்காளர்களின் வாக்களிப்பின் மூலம் 6 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

### மிக நீளமான வாக்குச் சீட்டு வடக்கில்

இந்த இரண்டு தேர்தல் தொகுதிகளிலும் எல்லாமாக 8 லட்சத்து 58 ஆயிரத்து 861 வாக்காளர்கள் வாக்களித்து 13 உறுப்பினர்களைத் தெரிவு செய்யவிருக்கின்ற அதேவேளை 35 சுயேச்சைக் குழுக்



கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் இலங்கையிலேயே மிக நீளமான வாக்குச் சீட்டு என்ற பெருமையை இந்த முறை வடக்கு மாகாணமே பெறும் என்பது திண்ணம். ஏனெனில் இது வரை கட்டுப் பணம் செலுத்தியுள்ள போட்டியாளர்கள், கட்சிகளின் விவரத்தின் அடிப்படையில் இலங்கையிலேயே மிக அதிக சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தைச் செலுத்திய தேர்தல் தொகுதியாக வன்னித் தொகுதி காணப்படுகிறது. வன்னியில் 17 குழுக்களும் யாழ்ப்பாணத்தில் 14 குழுக்களும் இவ்வாறு கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

### 2015 தேர்தலில் ஆசனங்கள்

இறுதியாக 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது. அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டில் செல்லுபடியான 3 லட்சத்து 309 வாக்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



2 லட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்றது. இது மொத்த வாக்களிப்பின் 69 விகிதமாகும். அடுத்த படியாக 30 ஆயிரத்து 232 வாக்குகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பெற்றுக்கொண்டது. இது 10 வீத வாக்காக காணப்பட்டதோடு ஐ.தே.கட்சி 20 ஆயிரத்து 69 வாக்குகளைப் பெற்று 6.69 விகிதத்தை எட்டிப் பிடித்து இறுதி ஆசனத்தையும் பெற்றுக்கொண்டது. இருந்தபோதும் ஐ.ம.சு.முன்னணி 17 ஆயிரத்து 309 வாக்குகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 15 ஆயிரத்து 22 வாக்குகளையும் பெற்று ஆசனங்களைப் பெறும் வாய்ப்பை இழந்தன.

### வன்னியில் கூட்டமைப்பு

வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது. அதாவது வன்னி மாவட்டத்தில் செல்லுபடியான ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 775 வாக்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 89 ஆயிரத்து 886 வாக்குகளைப் பெற்றது. இது மொத்த வாக்களிப்பின் 54 விகித்த்தினையும் தாண்டியது. அடுத்த படியாக 39 ஆயிரத்து 513 வாக்குகளை ஐ.தே.கட்சி பெற்றுக்கொண்டது. இது 24 சதவிகித வாக்கைத் தொட்டது. ஐ.ம.சு.மு 20 ஆயிரத்து 965 வாக்குகளுடன் 12.77 விகிதத்தை எட்டிப் பிடித்து இறுதி ஆசனத்தையும் பெற்றுக்கொண்டது.

### உள்ளூராட்சித் தேர்தல் அளித்த உத்வேகம்

2015 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் கூட்டமைப்பு அதிக வாக்குகளைப் பெற்ற நிலையில் 2018ஆம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட தேர்தல் முறைமையின் கீழ் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பைக் காட்டிலும் ஏனைய கட்சிகள் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றமையால் அவர்கள் இடத்திலும் இந்தத் தேர்தல் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடக்கில் 75 ஆயிரத்து 368 வாக்குகளையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 68 ஆயிரத்து 301 வாக்குகளையும் பெற்றிருந்த நிலையில் தமது வாக்கு வங்கி அதிகரித்திருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். இந்த நிலைநில் தமது வாக்கு வங்கியில் வீழ்ச்சி இல்லை எனக் காட்டவேண்டிய தேவை கூட்டமைப்புக்கு உள்ளது. கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு இடையிலான கருத்து மோதலே அவர்களின் வாக்கு வங்கியின் இன்றைய நிலமையைத் தீர்மானித்துள்ளது என்ற கருத்தையும் மறுக்க முடியாது.






# பாடசாலைகள் ஆரம்பமான பின்பே உயர்தரப் பரீட்சைத் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் உயர்தர பரீட்சை நடைபெறும் திகதி தீர்மானிக்கப்படுமென கல்வி அமைச்சர்டலஸ்அழகப்பெருமதெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயர்தரப் பரீட்சையைச் சில வாரங்களுக்கு தாமதப்படுத்துமாறு மாணவர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தினால் உயர்தரப் பரீட்சை இடம்பெறும் திகதி தீர்மானிக்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் – என்றார்.



# இந்தியத் தூதுவரை சந்தித்த இ.தொ.கா.

## மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் ஆராய்வு!

கொழும்பு,ஜூன்.20

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் சந்தித்து மலையக மக்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று, வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுடன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், முன்னாள் மாகாண அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது, பெருந்தோட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்குதல், பதுளை, கண்டி மற்றும் ஏனைய பிரதேசங்களில் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் அமைத்து அதன் ஊடாக திறமையான மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளை உருவாக்கும் நோக்கில் புதிய தேவையான பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்துதல், டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் தாதியர் கல்லூரி அமைத்தல், வைத்திய முகாமைத்துவ கல்லூரி ஒன்றை அமைப்பதன் மூலம் எதிர்காலத்தில் திறமையுள்ள இளைஞர்களை வைத்தியத்துறையிலும் சுகாதாரத்துறையிலும் ஊக்குவித்தல், அம்புலன்ஸ் வசதிகளை அதிகரிப்பதுடன் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு அவசரமான நேரங்களில் சரியான காலத்திற்கு நோயாளியை கொண்டுசெல்லல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.மிக முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (ம – 12)

# தமிழருக்கு முதுகெலும்புள்ள அரசியல் தலைமையே தேவை

## அரசியல்வாதியான சிவசக்தி சொல்கிறார்

வவுனியா, ஜூன்20

தமிழ் மக்களினுடைய உரிமையையும், பாதுகாப்பையும் முன்னெடுத்துச் செல்வதற்கு முதுகெலும்புள்ள அரசியல் தலைமை தேவை என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்திருக்கின்றனர் என முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.



தியாகிகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்சமயம் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த தேர்தல் ஊடாக ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதிக்கு பின்னர் ஒரு புதிய அரசு ஆட்சியை அமைக்க இருக்கிறது.

தற்சமயம் ஆட்சியில் இருக்கக் கூடிய ஜனாதிபதி சிங்கள, பௌத்த இராணுவ ஆட்சியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றார். இது தமிழ் மக்களை பொறுத்தமட்டில் ஆபத்தான ஒரு கட்டத்தை நோக்கி செல்வதாகும்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஓய்வு பெற்ற இராணுவத்தளபதி உட்பட சிங்கள பௌத்த துறவிகளை உள்ளடக்கியே அந்தச் செயலணி அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் வடக்கிலும் அமைப்பதற்கு எண்ணுகின்றார்கள்.

வடக்கு,கிழக்கு மாகாணம் ஏற்கனவே இரண்டாகத் துண்டாடப்பப்பட்டிருக்கின்ற நிலையில் மீண்டும் சிங்கள, பௌத்த இராணுவ மேலாதிக்கத்தைத் திணிக்கும் நிலைமையை நோக்கி இந்த அரசு சென்று கொண்டிருக்கின்றது.

ஆகவே தமிழ் மக்கள் இப்படியான ஒரு காலகட்டத்தில்தான் இந்தத் தேர்தலிலே வாக்களிக்க உள்ளனர். கடந்த காலத்திலே தமிழ் மக்கள் நம்பி வாக்களித்த தலைமைகள், மாறி மாறி வந்த அரசுகளுக்கு விலை போனமையே இந்த நிலைமை ஏற்பட்டதற்கு காரணம்.

ஆகவே இந்த நாடாளுமன்ற தேர்தல் ஊடாக உறுதியான, கொள்கையோடு தமிழ் மக்களினுடைய உரிமையையும், அபிவிருத்தி, பாதுகாப்பையும் முன்னெடுத்துச் செல்வதற்கு முதுகெலும்புள்ள அரசியல் தலைமை தேவை என்பதனை தமிழ் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

எனவே கடந்த காலத்திலே விலை போன தலைவர்களை நிராகரித்து, தமிழ் மக்களுக்கு ஓர் உறுதியான தலைமை வேண்டும் என்ற செய்தியை இந்த தேர்தல் நிச்சயமாகச் சொல்லும் – என்றார்.



# அரசியலின் மீது கடும் வெறுப்பு!

## அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 20

இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடும் எந்த எதிர்பார்ப்பையும் தான் கொண்டிருக்கவில்லை எனவும், அந்தளவுக்கு அரசியல் மீது வெறுப்பு ஏற்பட்டிருந்ததாகவும் முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சில விடயங்களைத் திருத்த முயற்சிக்கும்போது எமது அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களே அதற்குத் தடையேற்படுத்தினர்.

நாட்டின் வளங்களைப் பாதுகாக்க முயற்சித்தபோது எமது அமைச்சரவையில் இருந்தவர்களிடம் இருந்து பெரிய தடைகள் ஏற்பட்டன.

நாங்கள் நல்லாட்சி அரசை ஏற்படுத்தினோம். மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க முடியும் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவை நாங்கள் தோற்கடித்து அரசை அமைத்துச் சிறந்த பயணத்தை மேற்கொள்ள முயற்சித்தபோது ஏற்பட்ட பிளவுகள் காரணமாக வெறுப்படைந்து நான் அரசியலில் இருந்து ஒதுங்கவே இருந்தேன்.

எனினும் கட்சி இரண்டாக பிளவுப்பட்டுள்ள தருணத்தில் நான் இருக்க வேண்டும் என கருதினேன் – என்றார்.

உடனடி வேலைவாய்ப்பு

காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன.

- விளம்பரம் சேகரிப்பவர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
- பிரதேச செய்தியாளர்கள்
- அலுவலக செய்தியாளர்கள்

தொடர்புகளுக்கு - 076 443 8623

Green Media House (pvt) Ltd
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரி மைதானத்திற்கு எதிரில்
076 443 8623

# மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டு; முழு விசாரணைக்குப் பணிப்பு!

2011 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பணத்துக்காகக் கிண்ணத்தை தாரை வார்த்ததாக அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் உடனடியாக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2011 உலகக்கிண்ண இறுதிப் போட்டி இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நிலையில், இந்தப் போட்டியில் இந்திய அணி 06 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்தப் போட்டி பணத்துக்காக தாரை வார்க்கப்பட்டதாக அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சரின் அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர்களான குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்தன ஆகியோர் தமது ட்விட்டர் கணக்கின் ஊடாகப் பதிவுகளை வெளியிட்டனர்.

இதில், தேர்தல் அண்மித்துள்ள நிலையில் சர்க்கஸ் ஆரம்பமாகியுள்ளதாக மஹேல ஜயவர்தன குறிப்பிட்டிருந்தார்.

போட்டி காட்டிக்கொடுக்கப்பட்டமை சம்பந்தமான சாட்சியங்கள் இருக்குமாயின் அவற்றை வெளியிடுமாறும் மஹேல ஜயவர்தன தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டார்.

பின்னர் ட்விட்டர் பதிவொன்றை இட்ட குமார் சங்கக்கார, முன்னாள் அமைச்சர் அவரின் சாட்சியங்களைச் சர்வதேச கிரிக்கட் கவுன்ஸில் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவுக்குச் சமர்ப்பித்து விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளூர் வங்கிகளிடம் கடன் பெறத் தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 20

உள்ளூர் வங்கிகள், உள்நாட்டில் இயங்கும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் இருந்து 50 கோடி அமெரிக்க டொலர் நிதியைக் கடன் பெறுவதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் கடன்தொகை 2020 ஆம் ஆண்டில் அரசின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட வங்கிகள் நிதி நிறுவனங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு முன்பாக தங்களது திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு திட்டங்களை முன்வைக்கும் தரப்பினரிடம் இருந்து தலா 50 கோடி அமெரிக்க டொலர் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையானது ஒரு தடவையில் அல்லது தவணை முறையில் செலுத்தப்படும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

# ரிஷாத்தின் சகோதரன் குண்டுதாரிகளுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தமை உறுதி

## பொலிஸ் பேச்சாளர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன்20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குண்டுதாரிகளுடன், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் சகோதரனான மொஹமட் ரியாத் நேரடி தொடர்பு வைத்திருந்தாரெனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒளிபரப்பாகும் சிங்கள தொலைகாட்சி நிகழ்ச்சியில் நேற்று கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட தொடர் விசாரணையின்போதே இந்த விடயங்கள் உறுதி செய்யப்பட்டன என ஜாலிய சேனரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

ரிஷாத்தின் சகோதரனான அந்தச் சந்தேகநபர், குண்டு தாரிகளுக்குப் போக்குவரத்து வசதிகளை மேற்கொண்டுள்ளமையும் விசாரணையின் ஊடாகத் தமக்கு அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள சந்தேகநபரான மொஹமட் ரியாத், தற்போது கைதுசெய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# அவர் சிறிசேன, இவர் நந்தசேன இரண்டு சேனாக்களும் ஒன்றே!

## ஹிருணிகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 20

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத்தான் அன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமும் கண்டார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேன தற்போதைய ஜனாதிபதி நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ எனவும் இரண்டு சேனாக்களும் ஒரே மாதிரியானவர்கள் என்றும் அவர் கூறினார். கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி யின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச அதிகாரிகளை திட்டுவதால், மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என நினைக்கவில்லை.

தனது சகோதரரான பிரதமர் மீதுள்ள ஆத்திரத்தையே ஜனாதிபதி, மத்திய வங்கியின் அதிகாரிகளை கடுமையாகக் குற்றம் சுமத்தி, அந்த அதிகாரிகள் மீது தனது கோபத்தைக் காட்டியிருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேன தற்போதைய ஜனாதிபதி நந்தசேன எனவும் இரண்டு சேனாக்களும் ஒரே மாதிரியானவர்கள் – என்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முழுப்பெயர் நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் சக்தியின் வேட்பாளர் கைது

கொழும்பு, ஜூன் 20

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேர்தல் மற்றும் தனிமைப்படுத்த சட்டத்திட்டங்களை மீறித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் எனச் சுமத்தப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் அந்த வேட்பாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த வேட்பாளருடன் மேலும் மூன்று பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# பாடசாலைகளை ஆரம்பிக்க வசதியாக தொற்று நீக்கும் பணிகளில் பொலிஸார்





கொழும்பு, ஜூன் 20

நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளை அடுத்த மாத முற்பகுதியில் திறப்பதற்கு வசதியாக பாடசாலைகளை கிருமித் தொற்று நீக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் பொலிஸார் நேற்று முதல் இந்தப் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் பொலிஸார் மற்றும் படையினரின் பங்களிப்புடன் தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் செயற்பாட்டின் கீழ் பாடசாலை வளாகம், வகுப்பறைகள், கணினிக் கூடங்கள் உட்பட அனைத்துப் பகுதிகளும் கிருமி நாசினிகள் விசிறப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளன.

இதேவேளை, வடக்கில் உள்ள சில பாடசாலைகள் பெற்றோரின் பங்களிப்புடன் சிரமதானப் பணிகளை ஏற்கனவே ஆரம்பித்திருக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

தேவை
தரமான நாட்டு அரிசி மற்றும் செத்தல் மிளகாய் மொத்த கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு:-
071 7777559

காப்புறுதித் துறையில்
உடனடி வேலை வாய்ப்பு
- நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவரா?
- G.C.E O/L இல் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்திஅடைந்தவரா
- வருமானம் தவிர்ந்த இதர ஊக்குவிப்பு தொகை / ஊக்குவிப்பு அனுகூலம் பெற விரும்புவரா
உடனடியாக தொடர்பு கொள்ளவும்
Prashanth
0775627321

# இலங்கை சித்திரவதை முகாம்கள்; முக்கிய வரைபடம் வெளியாகியது

கொழும்பு, ஜூன் 20

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் சித்திரவதைகளுக்கு பயன்படுத்தப்பட்ட இடங்கள் தொடர்பான வரைபடம் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கான சர்வதேச நாளை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சித்திரவதையால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கான சர்வதேசநாளைக் குறிக்கும் முகமாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் (ITJP) மற்றும் இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கான ஜனநாயக அமைப்பு (JDS) ஆகியன இணைந்து இலங்கையின் முதலாவது சித்திரவதை வரைபடத்தைத் தயாரித்துள்ளன.

அந்த வரைபடமானது கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இராணுவம், பொலிஸ் மற்றும் துணை ஆயுதப் படைகளினால் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களை சித்திரவதை செய்வதற்காக தீவு முழுவதிலும் பயன்படுத்தப்பட்டவை எனச் சொல்லப்படும் 219 இடங்களைக் குறித்துக் காட்டுகின்றது.

தீவு முழுவதிலும் இடம் பெற்றிருக்கும் சித்திரவதைகளின் முழு அளவினை தமது வரைபடம் படம் போட்டுக்காட்டவில்லை என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் (ITJP) மற்றும் இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கான ஜனநாயக அமைப்பு (JDS) என்ற அமைப்பும் தெரிவித்துள்ளன.

முதலாவது மற்றும் இரண்டாவது ஜே.வி.பி.கிளர்ச்சியின் போது (ஜனதா விமுக்தி பெரமுன அல்லது மக்கள் விடுதலை முன்னணி) சித்திரவதை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொலிஸ் நிலையங்கள் சாதாரணமாகவே அதிகமாக இருந்தமையால் அவை இங்கு உள்ளடக்கப்படவில்லை.

2006 - 19 வரை பெயரிடப்பட்ட இந்த இடங்கள் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் சாட்சியங்கள் சேகரிப்புச் செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்டவையாக இருக்கும் அதேவேளை, நிச்சயமாக அவை முழுமையானவையும் இல்லை.


ஆச்சரியமளிக்கும் வகையில் 80 களின் பிற்பகுதியில் சித்திரவதைக்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டடங்களில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடம் மற்றும் அரசால் நடத்தப்படும் லேக் கவுஸ் பத்திரிகையின் அடித்தளக் கட்டடம் ஆகியனவும் உள்ளடங்குகின்றன.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் பெரும் எண்ணிக்கையிலான பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் என்பன மட்டுமல்லாது தொழிற்சாலைகள், பண்ணைகள், சினிமா தியேட்டர்கள், அரங்குகள் மற்றும் கோல்ஃப் விளையாடும் இடங்கள் என்பனவும் சித்திரவதை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

'1987 - 1989 காலப் பகுதியில் சிங்கள இளைஞர்களை மிருகத்தனமான முறையில் சித்திரவதை செய்வதற்கும் கொலைகள் செய்வதற்கும் ஆயுதப்படையினரால் பயன்படுத்தப்பட்ட இந்த இடங்களில் பல ஞாபகத்தில் இருந்து அழிந்து விட்டன' என ஜனநாயகத்துக்கான இலங்கை ஊடகவியலாளர் அமைப்பின் பாசன அபயவர்த்தன தெரிவித்தார்.

'ஒரு சமூகத்தின் ஒட்டு மொத்த தார்மீக மனச்சாட்சி என்பது வெறுமனவே மக்கள் வழிமூலம் மட்டுமின்றி அந்த மக்கள் எவ்வாறு இறக்கின்றார்கள் மற்றும் எவ்வாறு அவர்கள் நினைவு கூரப்படுகின்றார்கள் என்பதிலுமே தோற்றம் பெறுகின்றது. உயிர் வாழ்பவர்கள் இறந்தவர்களை நினைவுகூராது விடும்போது சமூகமானது ஆபத்தான மறுப்புக்கு உட்படுவதுடன் அது மீள நிகழ்வதற்கான ஆபத்தும் உள்ளது.

1989 இல் கேணல் கோட்டாபய ராஜபக்ஷ மாத்தளை மாவட்டத்துக்குப்




பொறுப்பான இராணுவ இணைப்பதிகாரியாக இருந்தார். இவருடன் அவரது கஜபாகு படைப்பிரிவின் லெப்டினன்டுகளான சவேந்திர சில்வா (இப்பொழுது இராணுத்தளபதி), ஜகத் டயஸ் (முன்னாள் இராணுவ அதிகாரிகளின் பிரதானி) மற்றும் சுமேத பெரேரா (இராணுவ அதிகாரிகளின் முன்னாள் பிரதி பிரதானி மற்றும் அண்மையில் ஒரு அமைச்சரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டார்) ஆகியோரும் இவருடன் இருந் தார்கள்.

ஜே.வி.பியின் காலப் பகுதியில் ஆயிரக்கணக்கான காணாமற்போன சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்த அரச விசாரணைக் குழுவொன்று மாத்தளை மாவட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளின் பெயரைக் கொண்ட ஒரு பட்டியலை தொகுத்து தயார் செய்தது. இந்தப் பெயர்களில் 'மாத்தளை இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக இருந்த ராஜபக்ஷவினுடைய பெயரும் இருந்தது.

இந்தப் பட்டியல் ஒரு போதுமே வெளியிடப்படவில்லை. இதே இராணுவ அதிகாரிகள் பின்னர் 2009 இல் இடம்பெற்ற பாரிய சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்களுக்கு உடந்தையாக இருந்தனர் எனச் சொல்லப்படுகின்றது. சவேந்திர சில்வா, ஜகத் டயஸ் போன்றவர்கள் வெளிப்படையாகவே அப்போதிருந்த இராணுவக்கட்டளை அமைப்பையும் தாண்டிச் சென்று கோட்டாபய ராஜபக்ஷவின் நேரடிக் கட்டளை மற்றும் அதிகாரத்தின் கீழ் 2009 இல் போரை நடத்துவதில் முக்கிய புள்ளிகளாக இருந்தார்கள். அவர்கள் 1989 இல் மாத்தளைக்கு அடுத்தாக உள்ள புத்தளத்தில் ஜே.வி.பியை நசுக்குவதில் ஈடுபட்டிருந்த கமால் குணரட்னவுடன் இணைந்து பணியாற்றினார்கள்.

'ஜே.வி.பி. இனது இரண்டாவது கிளர்ச்சியை நசுக்குவதில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகள் தண்டனையிலிருந்து முழுமையான பாதுகாப்புடன் தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களிலும் தொடர்ந்தும் ஈடுபட்டார்கள்' என சர்வதேச உண்மை மற்றும் நீதிக் கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

'1989 இல் இருந்து 2009 வரை இடம்பெற்ற மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கதாபாத்திரங்கள் தொடர்பில் நீங்கள் ஒரு நேர்கோட்டை வரையலாம்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைகள் அரச அனுசரணையுடன் இடம்பெறுகின்றன என்பதுடன் அது அரச கொள்கையின் ஒரு முக்கிய கருவியாகவும் உள்ளது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இந்தக் கொள்கையினைப் பாதுகாப்புப் படைகளின் எல்லா மட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் முழு அதிகாரமும் கட்டமைப்புக்களும் உள்வாங்கப்பட்டு முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன' - என சூக்கா தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட கல்வி நிலையால் வடக்கு மாகாண ஆளுநர் கவலை

யாழ்ப்பாணம் மாவட்ட கல்வி நிலை கவலைக் கிடமாக உள்ளது எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் எமது சமுதாயத்தின் எதிர்காலம் சூன்யமயமாகிவிடக்கூடாது என்பதை மனதில் நிறுத்தி, அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குட்பட்ட தீவகம், யாழ்ப்பாணம், தென்மராட்சி மற்றும் வடமராட்சி கல்வி வலயங்களுடனான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாநகர சபை பொதுநூலக கேட்போர் கூடத்தில் காலை 09:15 மணி தொடக்கம் மாலை 05 மணி வரை ஒவ்வொரு வலயத்துக்கும் தனித்தனியாக இடம்பெற்றிருந்தன.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர், மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஒவ்வொரு வலயங்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான நிகழ்த்துக் காட்சி அளிக்கைகளை பார்வையிட்டு கல்வி அபிவிருத்திக்கான அதிபர்களின் செயற்பாட்டு திட்டங்கள் மற்றும் கருத்துக்களை ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஆளுநர் தெரிவித்தவை வருமாறு:

நமது மாகாண கல்வி வீழ்ச்சிக்கு போர் நிமிர்த்தமான இடப்பெயர்வுகள், சமூகப் பொருளாதார இடர்பாடுகள், போக்குவரத்துப் பிரச்சினைகள், முறை யான வளப்பகிர்வின்மை போன்ற காரணங்கள் இருக்கின்றனவாக உணர்கின் றேன்.

வியாபாரத்திலும் கல்வியிலும் முன்னோடிகளாக நின்றவர்கள் தீவக மக்கள். அந்நிலையை மீண்டும் நாம் கொண்டு வர வேண்டும். பிரச்சினைகளைத் தள்ளிவைத்து மீண்டும் உரமேற்றி அம்மக்களை முன்னேற்ற ஆசிரிய சமூகம் ஒத்துழைக்க வேண்டும். வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து அவர்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்ற பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

மாணவர்கள் கல்வியை இடைநிறுத்துவதற்கான காரணங்களை இனங்கண்டு மீண்டும் அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வந்து கல்வி பயில வைக்க வேண்டும். ஏனென்றால், இவர்கள்தான் ஏனைய மாணவர்களை சீரழிப்பதோடு மட்டுமல்லாமல் சமூகக் குற்றங்களில் ஈடுபட்டு சமுதாயத்தையும் சீரழிக்கின்றார்கள். பிள்ளைகளின் உளநிலையைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அறியாமல் இருப்பதால் தான் அவர்கள் ஆர்வம் குறைந்து கல்வியை இடைநிறுத்தம் செய்கின் றார்கள்.

நமது சமுதாயத்தின் எதிர்காலம் சூனியமாக மாறிவிடக்கூடாதென்பதற்காக கல்விச் சமூகம் மிகவும் பொறுப்போடு செயற்பட வேண்டும். தனிப்பட்ட நலன்களை விடுத்து அர்ப்பணிப்புடன் பிரச்சினைகளைக் கலைந்து மாணவ சமூகத்துக்காக ஆசிரிய சமூகம் பாடுபட வேண்டும். அவ்வாறு செயற்படுகின்ற போது, நமது சமூகம் நிச்சயம் வளர்ச்சியடையுமென்பதை நான் நம்புகின்றேன்.

ஒரு காலத்தில் கல்வி என்றால் நமது நாட்டில் மட்டுமல்ல ஏனைய நாடுகளுக்கும் முதலில் நினைவுக்கு வருவது யாழ்ப்பாணம்தான். அப்பெருமையை இந்த மண் இழந்துகொண்டிருக்கின்றது. முன்னிலையில் இருக்கின்ற யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஏனைய கல்வி வலயங்களையும் முன்னேற்றுவதற்கு உதவ வேண்டும். சமூக ஒழுக்கத்தை இளைய சமுதாயத்திடம் கட்டியெழுப்ப வேண்டும். பாடசாலைகளின் உட்கட்டமைப்புத் தேவைகளை இனங்கண்டு முழு அறிக்கையொன்றை கல்வி அமைச்சினூடாகச் சமர்ப்பித்தால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய உதவிகளைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றேன்.

போர்க்காலகட்டத்தில்கூட நமது மாணவர்கள் நன்றாகப் படித்தார்கள். யாழ்பாணம் கல்வியின் தலை என்றும், வடமராட்சியும் தென்மராட்சியும் மூளை என்றும் ஒரு காலத்தில் சொல்வார்கள். ஆனால், அதன் இன்றைய நிலை கவலைக்கிடமாகவுள்ளது. அரசவேலைக்குத் தகுதியான பட்டதாரிகள் உருவாக்கப்படவில்லை. பட்டதாரிகள் படித்த துறையில் அரச வேலைகளில்லை. இதற்குக் காரணம் கல்வித்துறை தகுந்த பாடநெறியான வல்லுநர்களை உருவாக்கத்தவறியமையே ஆகும்.

கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். கல்வி இடைவிலகலை மட்டுப்படுத்த வேண்டும். பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெறும் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். அவர்கள் விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற பாடங்களைப் படிக்க வேண்டும்.

மாணவர்களுக்கேற்ப கற்பித்தல் இருக்க வேண்டும். மாணவர்களின் மனநிலையோடு இணைந்து சென்று கற்பிக்க வேண்டும். கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்தினாலேயே ஏனைய எல்லாத்தையும் மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அதனால்தான் கல்வித் துறையோடு கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றேன் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவ ஆட்சிக்கு நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது சிங்கள மக்களும் ஆட்சியாளர்கள் மீது பெரும் அதிருப்தி

## ஐ.தே.கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் தெரிவிப்பு

நமது வவுனியா செய்தியாளர் கி.வசந்தரூபன்

வவுனியா,ஜூன்20

இராணுவ ஆட்சிக்கு நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது. சிங்கள மக்கள் கூட இந்த அரசில் அதிருப்தியான நிலையில் உள்ளனர் என முன்னாள் மீள்குடியேற்ற அமைச்சரின் இணைப்பு செயலாளரும், ஐக்கிய தேசிய கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய ஜேம்ஸ் பிறமிலஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துவமாக தமது கட்சி உறுப்பினர்களுக்கு அபேட்சகர் உரிமையை வழங்கி போட்டியிடுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாட்டில் எல்லா இடமும் போட்டியிடுகிறது. வன்னி மாவட்டமும் முக்கியமானதொரு மாவட்டம். 1988 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் திருமதி ராஜமனோகரி வன்னி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு கல்வி, இராஜாங்க அமைச்சராகப் பாரிய சேவைகளை செய்தவர். ஆகவே வன்னி மாவட்டம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.



நல்லாட்சி காலப்பகுதியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் கௌரவமாக, சமாதானமாக, சமத்துவமாக வாழக்கூடிய ஒரு நிலையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி தந்தார். தற்போது வடக்கில் ஒரு வீதியை கடந்து செல்ல வேண்டுமாக இருந்தால் எத்தனை சாவடிகள், அவர்களை இறக்கி ஏற்றுகின்றது. மக்களை மன உளைச்சளுக்கு ஆளாக்கும் முகமாக பல்வேறு நடைமுறைகள் இடம்பெறுகின்றன. தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் பிரச்சனைகளை இந்த அரசாங்கம் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றது.

இந்த நாட்டில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க மூவின மக்களுக்கும் சேர்ந்து போராடினார்கள். ஆனால் தேசிய கீதத்தை கூட தமிழ் மொழியில் பாட முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இராணுவ ஆட்சிக்கு இந்த நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது. சிங்கள மக்கள் கூட இந்த அரசில் அதிருப்தியான நிலையில் உள்ளனர். கொரோனா வைரஸ் காலத்தில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் மக்களுக்கு தேவையான போதியளவு சுகாதார வசதிகளோ, நிவாரண உதவிகளோ வழங்கவில்லை என்ற குற்றசாட்டு இருக்கின்றது.

ஜனாதிபதி இந்த நாட்டை சீர்படுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்தாலும் இன்று நடக்கும் சம்பவங்கள் அவர் இந்த நாட்டை ஒரு சீரழிவான பாதைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கின்றார் என்பது அனைவருக்கும் விளங்கும். ஆகவே ரணில் விக்கிரமசிங்கவின் இனவாதமற்ற, மதவாத மற்ற அரசை அமைக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். – எனத் தெரிவித்தார். (உ -100)

# மின்சாரம் தாக்கி தம்பதியர் மரணம்

களுத்துறை, தொடங்கொட நெஹின்ன பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அமைக்கப்பட்ட சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி வயோதிபத் தம்பதியர் இருவரும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

உயிரிழந்தவர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். 68 வயதான கணவரும், 62 வயதான அவரது மனைவியுமே உயிரிழந்துள்ளனர்.

# அரசு பக்கம் தாவுவோரின் தாடைகளை உடைப்பேன்!

## ஐ.தே.க. வேட்பாளர் மேர்வின் சில்வா எச்சரிக்கை

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ராஜபக்ஷவினருடன் உடன்பாடு களை ஏற்படுத்திக்கொண்ட நபர் அல்லர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின்வேட்பாளரும்முன்னாள்அமைச்சருமான மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் இணைவது தொடர்பாக ராஜபக்ஷவினருக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதாகப் பரவி வரும் வதந்தி சம்பந்தமாகக் கருத்து வெளியிடும்போதே மேர்வின் சில்வா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும்பொதுத்தேர்தலில்மக்கள்தன்னை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்பினால், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசுக்குச் செல்லும் எவராக இருந்தா லும் அவர்களின்தாடைகளைஉடைக்கப்போவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். மேர்வின் சில்வா எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வதந்திகள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரையும் எதிர்த்தோ அல்லது ஆதரித்தோ யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை எதனையும் வெளியிடவில்லை என்று அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை முதல் பல்கலைக்கழக வளாகத்தினுள் காணப்பட்டவை எனக் கூறப்படும் சில அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் தொடர்பில், மாணவர் ஒன்றியத்துடன் தொடர்புபடுத்தி சமூக வலைத் தளங்களில் பரவிய செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் எம். பாலேந்திரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்குத்தெளிவானநிலைப்பாட்டை அறிவிக்கும் வகையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளி யிடுமாயின், அது ஒன்றியத்தின் கடிதத் தலைப்பில், தலைவர், செயலாளரின் கையொப்பங்களுடனேயே வெளியிடப்படும் என்றும், வதந்திகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நெடுந்தீவுக் கடலில் இருவர் 54 கிலோ கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ்ப்பாணம் நெடுந்தீவுப் பகுதி கடல்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான படகில் இருந்து 54 கிலோ கஞ்சாவுடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் சந்தேகமாக நடமாடிய படகில் சோதனை செய்த சமயம் அதில் பொதி செய்யப்பட்ட நிலையில் 54 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. இவ்வாறு கஞ்சா மீட்கப்பட்ட படகில் இருந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அந்தக் கஞ்சா பொதிகளுடன் கொரோனா தொற்று நீக்கி விசிறப்பட்ட பின்னர் நெடுந்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.









# கஞ்சிப்பானையின் தந்தை மீது தாக்கு; மற்றுமொரு சந்தேகநபர் நேற்று கைது

## இதுவரை ஐந்து பேர் சிக்கினர்

கஞ்சிப்பானை இம்ரானின் தந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கியமை தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்ஹிரு செவன தொடர்மாடி குடியிருப்புக்கு அருகில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

19 வயதான இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 05 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சிப்பானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட 4 பேரில் முதலாவது சந்தேகநபரான அனேஸ் ராஜா என்பவர் எதிர்வரும் 02 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய மூன்று சந்தேகநபர்களும் தடுப்புக்காவலில் விசாரணை செய்ய நீதிமன்றத்திடம் பொலிஸார் அனுமதி பெற்றுள்ளனர். கொழும்பு மேலதிக நீதிவான் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2020 இல் வெளியிடப்பெற்றது.